தமிழ்நாடு சட்டம் எண் XXVIII/1949.

1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு சணல் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டம்.

(1949 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாளன்று தலைமை ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; முதன்முதலில் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று அன்று புனித ஜார்ஜ் கோட்டை சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.)

தமிழ்நாடு மாநிலத்தில் சணல் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

தமிழ்நாடு மாநிலத்தில் சணல் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு வகைசெய்வது அவசியமாக இருப்பதால்; இது இதன்மூலம் பின்வருமாறு இயற்றப்பட்டது:–

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.– (1) இந்தச் சட்டம், 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு சணல் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

2. பொருள் வரையறைகள்.– இந்தச் சட்டத்தில், பொருள் அல்லது தறுவாய் எதுவும் முரணாக இருந்தாலன்றி,–

(a) "கட்டுப்பாட்டாளர்" என்பது 3 ஆம் பிரிவின் கீழ் மாநில அரசால் நியமிக்கப்பட்ட சணல் கட்டுப்பாட்டாளர் என்று பொருள்படும்;

(b) "சணல் பொருட்கள்" என்பது அனைத்து சணல் உற்பத்திகளையும் உள்ளடக்கும்.

3. கட்டுப்பாட்டாளரின் நியமனம்.– மாநில அரசு, புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில், அறிவிக்கை வாயிலாக, மாநிலத்தில், எந்த நபரையும் சணல் கட்டுப்பாட்டாளராக நியமிக்கலாம்.

4. சணல் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகத்தை கட்டுப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டாளரின் அதிகாரங்கள்.– (1) மாநில அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, கட்டுப்பாட்டாளருக்கு, சணல் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் அல்லது விநியோகத்தை அதிகரிப்பதன் மூலம் சணல் விநியோகத்தை ஒழுங்குபடுத்துதல், பராமரித்தல் அல்லது அதிகரித்தல் அவசியமென அல்லது உகந்ததென தோன்றுமாயின், எழுத்துவழி,–

(a) சணல் பொருட்களைக் கையிருப்பில் வைத்திருக்கும் எந்தவொரு நபரையும், அதனை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ அத்தகைய விலையில் மற்றும் (மைய அல்லது மாநில அரசு உள்ளடங்கலாக) அத்தகைய நபரிடம் விற்க வேண்டும் அல்லது ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய சூழ்நிலைகளில் விற்பனைசெய்யக் கோரலாம்;

(b) சணல் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், அவ்வப்போது உற்பத்தி செய்யப்படும் அல்லது வழங்கப்பட வேண்டிய சணல் பொருட்களின் வகை, தரம் அல்லது அளவு குறித்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுகளுக்கு இணங்கக் கோரலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணை பிறப்பிக்கப்படும் எந்தவொரு நபரும், அவர் ஒரு தரப்பினராக இருக்கும் எந்தவொரு ஒப்பந்தத்திலோ அல்லது பிற ஆவணத்திலோ உள்ள எந்தவொரு முரண்பாட்டிற்கும் உட்படாமல், அத்தகைய ஆணையை நிறைவேற்ற வேண்டும்.

5. தண்டனைகள்.– 4 ஆம் பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆணையையும் எந்தவொரு நபரும் மீறினால், அவர் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு காலஅளவிற்கு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

6. நிறுவனத்தால் செய்யப்படும் குற்றங்கள்.– 4 ஆம் பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளரால் பிறப்பிக்கப்பட்டஓர் ஆணையை மீறும் நபரானவர், ஒரு நிறுவனம் அல்லது பிற கூட்டு நிறுவனமாக இருந்தால், ஒவ்வொரு இயக்குனர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அல்லது அதன் முகவர், அந்த மீறல் தனக்குத் தெரியாமல் நடந்ததாகவோ அல்லது அத்தகைய மீறலைத் தடுக்க அனைத்து உரிய முயற்சிகளையும் மேற்கொண்டதாகவோ நிரூபித்தாலன்றி, அத்தகைய மீறலுக்கு குற்றவாளியாகக் கருதப்படுவார்.

7. குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.– அத்தகைய குற்றத்தை எடுத்துரைக்கும் உண்மைகள் குறித்து கட்டுப்பாட்டாளரால் செய்யப்பட்ட

எழுத்துப்பூர்வ அறிக்கையினாலன்றி, இந்தச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய எந்தவொரு குற்றத்தையும் எந்த நீதிமன்றமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது.

8. சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.– (1) 4 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட எந்தவொரு ஆணையின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசிக்கப்பட்ட எதற்கும் (கட்டுப்பாட்டாளர் உட்பட) எந்தவொரு நபருக்கும் எதிராக எந்தவொரு உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கையும் தொடரப்படுதல் ஆகாது.

(2) 4 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட எந்தவொரு ஆணையின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசிக்கப்பட்ட எந்தவொரு செயலாலும் ஏற்பட்ட அல்லது ஏற்படக்கூடிய எந்தவொரு சேதத்திற்கும் மாநில அரசு, கட்டுப்பாட்டாளர் அல்லது வேறு எந்த நபருக்கும் எதிராக எந்தவொரு உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கையும் தொடரப்படுதல் ஆகாது.

9. நீக்கறவும் காப்புரையும்.– (1) 1949 ஆம் ஆண்டு மெட்ராஸ் சணல் பொருட்கள் கட்டுப்பாட்டு அவசரச் சட்டம் (மெட்ராஸ் அவசரச் சட்டம் X/1949) ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட போதிலும், வெளியிடப்பட்ட எந்தவொரு அறிவிப்புகள் அல்லது ஆணைகள், எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது மேற்கூறிய அவசரச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எந்தவொரு அதிகாரத்தையும் செயல்படுத்துவதில் செய்யப்பட்ட செயல், இந்தச் சட்டம் 1949 நவம்பர் 5 ஆம் தேதி நடைமுறைக்கு வந்ததைப் போல, இந்தச் சட்டத்தால் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் வெளியிடப்பட்டதாகவோ, எடுக்கப்பட்டதாகவோ அல்லது செய்யப்பட்டதாகவோ கருதப்படுதல் வேண்டும்.